Pālliyar Nesan No 10, vol III
Jaffna - Octr 1866
E. P. Hastings
COLONIAL SECRETARY'S OFFICE RECEIVED OC 13 1866 COLOMBO



# பாலியர் நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௩ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௬ம் ௵ ஐப்பசி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். சங்கியை, ௰.

### பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | | சி. | ௧ |
| ஒரேமுறையில் ௰ | " | " | " | ௯ |
| ௨௰ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௰ | " | " | " | ௪௰ |
| ௱ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

### SUBSCRIPTIONS.

| | s | d |
|---|---|---|
| Rev. C. C. McArthur - | 21 | 0 |
| Mr. J. R. Arnold - - | 1 | 0 |
| " N. Strong - - | 1 | 0 |
| " W. Sherrard, 1865 and 6 | 2 | 0 |
| " Barnabas - - | 1 | 0 |
| " A. Lyman - - | 1 | 0 |
| " J. S. Tappan - - | 1 | 0 |
| Dr. D. C. Vayitelingam - | 1 | 0 |
| " C McIntyre - - | 1 | 0 |
| R Clark, Esq. 1865 and 6 - | 2 | 0 |
| C. B. Paulick, Esq. | 1 | 6 |
| Manepy English Free School | 2 | 0 |
| Mr. D. Vyrakkayam - | 1 | 0 |

### ஐப்பசிமாசம்.

இதற்கு இங்கிலீஷில் அக்டோபர் (October) என்பார்கள். பங்குனி துவக்கி எட்டாம் மாதமென்றாகநந்தை இச்சொல்காட்டும். தற்காலவழக்கப்படி பத்தாம்மாதமாக எண்ணப்படுகிறது. அமாவாசிக்கு முதற்றினமாகிய சதுர்த்தேசியை தமிழ்நாட்டார் பெருந்தினமாகக் கொண்டாடுவார்கள். அத்தினத்தில் நரகாசுரனை கிருட்டிணன் கொலைசெய்ததினால் சகலருஞ் சந்தோஷங் கொண்டாடும்படி எண்ணெயிட்டு ஸ்நானஞ்செய்து கோடிவஸ்திரந்தரித்து மகிழ்வார்கள்.

இம்மாதத்தின் அமாவாசி கழிந்த பிரதமை துவக்கி ஆறுநாளாகக் கந்தசட்டிவிரதமனுட்டித்து கோவில்களில் திருச்செந்தூர்ப்புராணம்படித்து பூசைகொடுப்பார்கள். சூரபன்மனை அதம்பண்ணின சந்தோஷத்திற்காகவே இந்த ஆறுநாளையுங் கொண்டாடுவார்கள்.

பிள்ளைகளே அசுரர்களிறந்ததற்காகச் சந்தோஷப்படுகிறதினால் நமக்கு என்னபலன். எங்கள் பாவங்கள் நீங்குவது நமக்குப் பெரியகாரியமல்லவா? சற்குருவாகிய யேசுவானவர் எங்கள் சத்துருவாகிய பசாசின் தலையை நசுக்கினாரென்றும் எங்களை இரட்சிக்க வழியுண்டாக்கினாரென்றும் சந்தோஷப்படுங்கள்.

### கிரகணம்.

புரட்டாசிமாசம் ௨௪ திகதி பொழுது அஸ்தமிக்கிறநேரத்தில் சந்திரகிரகணம் உண்டானதைச் சகலருங் கண்டிருப்பீர்களென்று நம்புகிறோம். ஒன்றரைக்கிரகணத்திற்குக் கூடவென்பதுவே அதின்பிரமாணம். அறிவு பரம்பியிருக்கிற தற்காலத்திலும் சந்திரனைப் பாம்பு விழுங்கினதென்றும் அல்லது மறைத்ததென்றும் சொல்வதைக் கேட்கிறபொழுது மிகவும் விசனப்படுகிறோம். பாம்பு விழுங்கினால் அல்லது மறைத்தால் எவ்விதமாகக் கக்கினது அல்லது மறைவு நீங்கினது. விழுங்கின அல்லது மறைத்தபக்கத்தால் கக்க அல்லது நீங்கக்காணவில்லையே. எதிர்ப்பக்கத்தால் நீங்கினதைக் கண்டீர்களே. பாம்பைக் கண்டீர்களா? இல்லையே. ஏன் இப்பொய்யைச்சாஸ்திரிமார்சொல்லுகிறார்கள்.

இன்னும் கிரகணவேளைக்கு முன் சாப்பிடுகிறோமென்று பொழுதஸ்தமிக்கநேரத்தில் பலர் சாப்பிட்டிருக்கிறார்கள். அப்பொழுது கிரகணவேளையாயிருந்தது. சிலர் மூன்றுமணிபோலச் சாப்பிட்டுப் பின்சாப்பிடாமலும் சிலர் சாப்பிட இடங்கிடையாமல் பட்டினியாகவுமிருந்தார்கள். சாப்பிட்டவர்களுக்கு ஒரு நஷ்டமும் இன்னுங் காணவில்லை. ஆகாயத்திற் பிடித்த சந்திரகிரகணம் நமக்கு நன்மை தீமைகளை உண்டாக்குமாகில் கடவுள் எங்கே? நாம் சமைத்ததைச் சாப்பிடக்கூடாதுபோகில் சமைக்கப்படாமலிருந்த அரிசி காய்கனி பண்டங்களை எப்படிச்சாப்பிடலாம். அவைகளில் கிரகணத்தின் சத்துப் பலியாதோ. ஆ எவ்வளவு மடமை!

இன்னும் சிலர் ஒன்றரைக்கிரகணமென்றதால் முதல் முழுக்கிரகணம்பிடித்து நீங்க மறுபடி அரைக்கிரகணம்பிடிக்குமென்று நினைத்து அதைக் கண்டறியவேண்டுமென்று கண்விழிப்புடன் பார்த்துநின்றார்களென்றுங் கேள்விப்பட்டோம். இவைகளை நாம் கேள்விப்படுகையில் உண்மையான வானசாஸ்திரத்தை நம்மூரார் படியாததால் மிகவுந் துக்கப்படுகிறோம். கிரகணம் அமாவாசியில் அல்லது பௌர்ணமியிலுண்டாகும். அமாவாசியிலுண்டாவது சூரியகிரகணம். பௌர்ணமியிலுண்டாவது சந்திரகிரகணம். சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் நடுவே சரிநேராகவிருக்கையில் சூரியகிரகணமுண்டாம். பூமி சூரியனுக்கும் சந்திரனுக்கும் நடுவே சரிநேராகவிருக்கையில் பூமியின் நிழல் சந்திரனை மறைப்பதால் சந்திர கிரகணமுண்டாம். இதைப்பற்றி வானசாஸ்திரப் புத்தகத்தைப் பாருங்கள். இராகு கேதுவென்னும் அசுரராகிய சர்ப்பங்கள் வானத்திலில்லையென்று தூரதரிசி இயந்திரத்தினால் ஐரோப்பியவானசாஸ்திரிகள் கண்டு நிச்சயித்திருக்கிறார்கள். அப்படியில்லாதேபோகில் எப்படித் தமிழ்சாத்திரிகள் கிரகணத்தைக் கணிக்கிறதென்று கேட்பீர்களாகில், ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று எந்தப்பாளைக்காரனுஞ் சொல்வார்கள். கணக்குச்சரி அவர்கள் சொல்லும் மூகாந்திரம் பிழை. அவர்கள் சாயைக்குப் பதில் பாம்பென்றுசொல்லுகிறார்கள். இதின் உண்மையை அறிவதற்கு தூரதரிசியெந்திரம் தேடிப்பார்த்தால்தெரியும்.

### உலகத்தின் எழுஅதிசயங்கள்.

௧. பாபிலோனின் மதிலும் தொங்குதோட்டமும்.

பாபிலோன் நகரம் கல்தேயா தேசத்து இராசதானி. அது பூர்வத்தில் பாபேல்கோபுரம் நின்ற விசாலித்த மைதானத்தில் நிம்ரோத்து என்பவனாற் கட்டப்பட்டு, பின்பு பேலூ என்பவனாற் பெரிதாக்கப்பட்டது. இராசஸ்திரி செமிரேமி என்பவள் அதை மிக விஸ்தாரமாக்கி அலங்கரித்தாள். அதின்பின் நேபுகாத்நேசரும் முன்னிலும் அதிக விஸ்தாரமாகச் சிறப்பித்தார். வடக்கேயிருந்து ஐபிராத்துநதி இப்பட்டணத்தை ஊடறுத்துத் தெற்கே ஓடி அதை இரண்டாகப்பிரித்தது. பிரிவுண்ட இரண்டுபக்கங்களையும் ஒன்றாக இணைக்கும்படி அதின் மத்தியில் ௩௰ அடி அகலமுள்ள ஒரு பாலம் கட்டியிருந்தார்கள். பாலத்துக்கு இருபக்கத்திலும் இரண்டு சிங்கார இராசமாளிகைகளிருந்தன. ஒன்றிலிருந்து ஒன்றுக்கு ஆற்றின்கீழாய்ப் போக்குவரத்து செய்யத்தக்க நிலவறைவழியுமுண்டாயிருந்தது. அவ்விரண்டும் பெரிய அகழ்சூழ்ந்த மதிலால் கட்டப்பட்டிருந்தது. அந்த மதில் ௬௰ மைல்சுற்றளவும் ௩௱ அடி உயரமும் ௮௰ அடி அகலமுமுள்ளதாயும் அதின்மேல் ௨௱௫௰ கோபுரங்கள் கட்டப்பட்டுமிருந்தது.

எதிர்முகமாய்ப் பக்கத்துக்குப்பக்கம் ௨௫ பித்தளைவாசல்களும், வாசலுக்கு வாசல் செல்லும் ௱௫௰ அடி அகலமுள்ள ௨௫ தெருவீதிகளும் இவ்வீதிகளுக்குள் நாலுசதுரச்சோலைவெளிகளுமிருந்தது. இப்பட்டணத்தில் நேபுகாத்நேசர் உண்டாக்கியிருந்த தொங்குதோட்டமே சிரேஷ்டமானது. இது உண்டுபண்ணப்பட்டவிதமாவது; ௪ அடி சமசதுரபரப்பில் வில்வளைவாய்க்கட்டித் தட்டுத்தட்டாக உயர்த்தி அடித்தட்டில் ௰௬ அடி நீளமும் ௪ அடி அகலமுமுள்ள கற்களைப் பரவி அவைகளின்மேல் நிலக்கீலும் நாணலும் பரப்பி இரண்டு செங்கல் கனத்தில் சாந்திட்டு அதின்மேல் கனத்த ஈயத்தகடுபதித்து, பெரும் விருட்சங்களுண்டாகத்தக்கனத்தில் மண்ணிட்டுத் தட்டியிருந்தது. மேலேபோக மதிற்சிகரங்களைக்கும் தேர்த்தட்டுப்போலத் தட்டுத்தட்டாகக்கட்டி, தட்டுகள்தோறும் பிரமாண்டவிருட்சங்களையும் கொடிசெடிகளையுமுண்டாக்கியிருந்தது. எல்லாவற்றிற்கும் மேல் நடுத்தட்டில் ஒரு குளம்போலச்செய்து, பாரிய இயந்திரம் என்னும் ஒருவகைச்சலசூத்திரத்தால், ஐபிராத்துநதியிலிருந்து அதிற் தண்ணீர்வருவித்துக் கட்டுவைத்துக்கொண்டு அக்குளத்திலிருந்து தட்டுகள்தோறும் உச்சியிலிருந்து அடித்தட்டுமட்டும் விருட்சங்களுக்கு நீர்ப்பாயும்படி செய்திருந்தது. இப்பட்டணம் அழிந்துபோமென்று தீர்க்கதரிசிகள் தேவவசனமாய் அறிவித்தார்கள். மூகாந்திரம் யாதெனில் அதின் விக்கிரகாராதனை, கொடுங்கோன்மை, அகங்காரம், பெருண்டாசை, குடிவெறி, பொய், விபசாரமுதலானவைகளே. பாபிலோ

ன்தவரைமட்டுமே தாழ்த்தப்பட்டிருக்கிறது. "அதின் அஸ்திபாரங்கள் விழுந்தது" தீர்க்கதரிசின் சொற்படி சகலமும் நிறைவேறின.

## சந்தோஷமின்மை.

ஒரு இராசாவின் அரமனையில் ஐசுவரியமுள்ள ஒரு மனுஷனிருந்தான். அவன் இராசாவின் உள்ளறை விசாரணைக்காரன். அவன் எப்பொழுதும் வில்லூர்திப்பட்டு வஸ்திரந்தரித்து மிகு சம்பிரமமாக வாழுவான். அவன் இரண்டொரு தரம் தூரதேசங்களில் சிநேகிதனாகவிருந்த ஒருவன் வெகுகாலமாகத் தன் சிநேகிதனைக் காணாதிருந்து வெகுதூரத்திலிருந்து அவனைத் தரிசிக்கவந்தான். வந்து சேர்ந்தவுடன் ஐசுவரியவான் தனது உற்றார் உறவர் முதலியவர்களை அழைத்துத் தனது சிநேகிதனுக்கு விருந்து கொடுக்கும்படி ஆரம்பித்தான். வெள்ளிப்பொற்கும்பானங்களில் அறுசுவைப் பதார்த்தங்களும் பந்தியில் வைக்கப்பட்டிருந்தன. சகல உச்சித ருசிவகைகளுமிருந்தன. ஐசுவரியவான் தலைப்பந்தியில் உட்கார மற்றவர்களெல்லாரும் வரிசைவரிசையாக உட்கார்ந்தார்கள். தூரதேசத்திலிருந்து வந்த சிநேகிதன் அவன் வலப்பக்கத்தில் உட்கார்ந்தான். சகலருந் திருத்தியாகச் சாப்பிட்டுக் குடித்துக் களித்தார்கள்.

தூரத்திலிருந்துவந்த சிநேகிதன் ஐசுவரியவானைப்பார்த்து உமது வீட்டிற்காணுங் காட்சிபோல ஒருஇடத்திலுங் கண்டதில்லை; நீர் அதிமனச்சந்தோஷமுள்ள மனுஷனென்றான். அப்பொழுது ஐசுவரியவான் பொற்கும்பானத்திலிருந்த செக்கிறமான பெரும் அத்திப்பழத்தை எடுத்து இந்தப் பழம் பொற்கும்பானத்திலிருந்தது, மிகவும் வடிவுள்ளது, இந்தாரும் என்று தன் சிநேகிதனுக்கு நீட்டினான். அதை அவன் வாங்கி இரண்டாக வெட்ட, அதின் நடுவில் ஒரு புழுவிருந்தது. அப்பொழுது அவன் ஐசுவரியவானைப்பார்க்க, ஐசுவரியவான் பெருமூச்சுவிட்டு நிலத்தைப் பார்த்தான்.

இதின் படிப்பினைஎன்ன. உலகத்தில் பணம்பண்டம் சாப்பாடு பட்டுவஸ்திரம் உத்தியோகம் முதலியவைகளினால் ஒருவனுந்தன் மனத்திருத்தியுள்ளவனாக விருப்பதில்லை. இந்த ஐசுவரியவான் தன்னிடத்தில் சந்தோஷம் மனப்பாக்கியம் இல்லையென்பதைக் காட்டும்படிக்கே அத்திப்பழத்தை எடுத்துத் தன் சிநேகிதனிடத்தில் கொடுத்தான். மெய்யான தேவபத்தியன்றி வேறொன்றும் மனுஷனுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கமாட்டாது.



## திமிங்கிலவேட்டை.

இந்தப்படத்தில் ஒரு திமிங்கிலமும் கப்பலும் வள்ளமுமிருக்கிறதைக் காண்கிறீர்கள். முதல் திமிங்கிலத்தைக்குறித்துச் சிலகாரியத்தைச் சொல்லுவோம். கல்விமான்கள் திமிங்கிலத்தை மீன்வகுப்புடன் சேராமல் நாற்கால்செந்துடன் சேர்த்திருக்கிறார்கள். மிருகசாதிக்கிருப்பதுபோல நுரைஈரல் அவைகளுக்குண்டு. தரையிலுள்ள மிருகங்களைப்போலவே அவைகள் வெளிமேற் சுவாசம்விடும். மீன்களுக்கு நுரைஈரலில்லை. அவைகள் சுவாசம்விடுவதில்லை. தரையிலுள்ள மிருகங்களிலும்பார்க்க நெடுநேரமாகத் திமிங்கிலம் தண்ணீருக்குள்ளிருக்கும். அவைகள் ஏறக்குறைய ஒன்றரைமணித்தியாலத்திற்குத் தண்ணீருக்குள்ளிருக்கும். அவைமூச்சுவிடுவதற்காக வெளியேவரும். அப்படிவராதிருக்கில் அமிழ்ந்திப்போம். திமிங்கிலம் தங்கள் குஞ்சுகளுக்கு ஆடு மாடு பூனை முதலியவைகளைப்போலப் பால் கொடுக்கின்றன. நெடுநாளாகப் பால்குடித்த தள்ளி தாய்மேல் விழுந்து விளையாடும். மீன்கள் பால்கொடுத்து வளர்க்கிறதில்லை. தங்கள் குஞ்சுகளைப்பற்றி விசாரிக்கிறதுமில்லை. திமிங்கிலங்களுக்குநாசித்துவாரமில்லை. ஆனால் அவைகள் தலையின் மேற்பக்கத்திலுள்ள துவாரத்தால் மூச்சுவிடுகின்றன. அதின்வழியாகவே சிறுதுவேளைகளில் (படத்திற்காண்கிறபடி) இருபதுஅடி உயரமாகத் தண்ணீரைக் கொப்புளிக்கின்றன. அப்படிக்கொப்புளிக்குஞ்சத்தம் இரண்டுமைலுக்கப்பாலுங்கேட்கும்.

ஒருவகையான நெய்எடுத்து வியாபாரம்பண்ணும்படியாகவே திமிங்கிலங்களை வேட்டையாடுவார்கள். இது பிரதான வியாபாரங்களிலொன்று. இதற்காக அநேக ஆயிரக்கணக்கான மனுஷர் புறப்படுவார்கள். கப்பற்காரர் ஒருவகையான ஈட்டிகளிற் கயிறுகட்டி வைத்திருப்பார்கள். திமிங்கிலம் மூச்சுவிடும்படி வெளிமேல்வரும்பொழுது ஈட்டிகளை அதின்மேல் எறிவார்கள். உடனே அந்த ஈட்டிகளுடனே தாழும். நெடுநேரந் தண்ணீருக்குள் இருக்கக்கூடாததினால் மறுபடியும் மூச்சுவிடும்படி வெளியேவரும். அப்பொழுதும் ஈட்டிகளை எறிவார்கள். இவ்விதமாகப் பலதரமுஞ் செய்து அதைக் கொல்லுவார்கள். கொன்று அதின் கொழுப்பைவெட்டி ஏறக்குறைய நூறுபீப்பாவரைக்கும் எண்ணெயால் நிரப்புவார்கள். திமிங்கிலத்தின் நீளம் எழுபது அடிக்குண்டு. தண்ணீருக்குட்செல்லுங்கதி சொல்ல முடியாது. பிரதானமாகக் காயம்பட்டவுடன் சமுத்திரமட்டங்களும் நுரையாக்கி மிகுவேகியாகச் செல்லும். வாலைச்சுழற்றிச் சலத்திலடிப்பதால் கடல் நுரைகொள்ளும். காயப்பட்டவுடன் ஆழத்தே செல்லும். அதுவும் ஒருமணித்தியாலத்தில் ஏறக்குறையப் பத்துக்கட்டை தூரம் செல்லும். அது மறுபடி மிதந்துவருகையில் படத்திற காண்கிற பிரகாரம் சலத்தை மேலாகக் கொப்புளிக்கும். ஏறக்குறைய எண்ணூறுபாரத்துக்குத் தாழும். இப்படிப் பலதரமுந் தாண்டி ஈற்றில் வேட்டைக்காரர் கையில் அகப்படுகையில் சமுத்திரம் செக்கிறமாகவிருக்கும். அவர்களும் செக்கிறமாகக் காணப்படுவார்கள். திமிங்கிலத்தின் மேற்தாடைக்குள் தோணிவடிவாக இரண்டு நிரையான முள்ளுக்களிருக்கும். ஒவ்வொரு பக்கத்துக்கு அா முள்ளுக்களுண்டு. இவைகள் சின்னதாக அரும்பி பத்தடிநீளத்துக்கு வளரும். இந்த முள்ளுக்களினால் குடைகளையும் மற்றும் பொருட்களையும் உண்டாக்குவார்கள்.

திமிங்கிலவேட்டை மோசமுள்ளதாகவுமிருக்கின்றது. அநேக பிராணசேதங்களும் உண்டுபடுகின்றன. திட்டாந்தமாக ௲அ௱உ௰ ஆண்டு சுற்பித்தான் இலையன்சு (Lyons) என்பவர் லாபிரதோவின் கரைதுறையில் கப்பலிலிருந்து சற்றுத்தூரத்தில் ஒருபெரிய திமிங்கிலத்தைக்கண்டார். கண்டு நாலுவள்ளத்தை அனுப்பிவிட, இரண்டு வள்ளம் அதின் கிட்டப்போய் இரண்டு ஈட்டிகளை எறிய, சிறிதுபொழுதுக்கு திமிங்கிலந் தாண்டி மறுபடி மிதந்து வருகையில் பின்னொரு வள்ளத்தின் கீழ்வந்து தன் தலையால் வள்ளத்தைத் தூக்கி ஆகாயத்தில் பதினைந்தடி உயரத்துக்கு எறிய தலைகீழாக வள்ளம் விழுந்து அமிழ்ந்ததுவாக இருக்கையில் அடுத்த வள்ளக்காரர் இவர்களைத் தூக்கி எடுத்தார்கள். சிறிதுகாலங்களில் கப்பல்களைத் துண்டுதுண்டாக அடித்துடைக்கின்றது. திமிங்கிலங்கள் சோடுசோடாக ஒன்றுக்கொன்று மிகவும் கரிசனையுள்ளது. ஒன்றுக்கு மோசம்வருகையில் மற்றது தப்பிஓடாமல் அதுவுடன் கூட நிற்கின்றது. தங்கள் குஞ்சுகளில் மிகவும் பட்சமாகவிருக்கும். தங்களுடன் கூடவே கொண்டுதிரியும். தங்களுடைய மோசத்தைக் கவனியாமல் அவைகளையே காப்பாற்றத் தெண்டிக்கும்.

ஒரு வைத்தியர் ஊதும் பவுணுக்கு ஒருசெத்த திமிங்கிலத்தை வாங்கி அதைப்பற்றிய விபரத்தை எழுதியிருக்கிறார். அதாவது,

| | |
|---|---|
| முழுத்திமிங்கிலத்தின் நீளம் | ௬௰ அடி. |
| அதின் அகலம் | ௰௮ அடி. |
| தலையின் நீளம் | ௨௰ அடி. |
| தலைஓட்டின் உயரம் | ௪௰ அடி. |
| முள்ளெலும்பின் தொகை | ௬௨ |
| விலாவெலும்புபக்கத்துக்கு ௰௪ ஆக | ௨௮. |
| இறகின் நீளம் | ௰௨ அடி. |
| விலாவின் நீளம் | ௰௨ அடி. |
| வாலின் நீளம் | ௨௨ அடி. |

கண்டவுடன் அதின்நிறை ௪ இல. அயிரம் இருத்தல்

எலும்பின் முழுநிறை ௰௫ம் இருத்தல்.

கொழுப்பிலிருந்த எண்ணெய் ௪௰ம் கலன்.

சதை க இல. ௰௫ம் இருத்தல்.

பின்னைகளே, யோபின் சரித்திரத்தில் ௪௰ம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள்.

## தற்போழிவு என்னும் இராட்சதன்.

இந்த இராட்சதன் மிகவும் அந்தக்கேடானவன். அவனை ஒரு மனுரூபாக்கி அவன் சித்திரத்தைப் படப்விஸ்தாரிப்பவனைக்கொண்டு விஸ்தாரித்துப்பார்க்கில் இப்படி ஒரு அவலட்சணரூபத்தை ஒருக்காலுங் காணவில்லையென்று சொல்லுவாய். உனக்கு எத்தனை கண்? இரண்டு. எத்தனை காது? இரண்டு. எத்தனை கை? இரண்டு. எத்தனை கால்? இரண்டு. இவைகளெல்லாம் நமக்காகவும் மற்றவர்களுக்காகவும் பார்க்கவுங், கேட்கவுங், வேலைசெய்யவும், நடக்கவும் வேண்டுமென்று நமக்கு உணர்த்துகிறது. ஆனால் உனக்கு எத்தனைவாய்? ஒன்று. ஆம், மற்றவர்களுக்காகவல்ல நமக்காக நாம் சாப்பிடவேண்டுமென்று உணர்த்துகின்றது. ஆகில் தற்பொழிவு என்னும் இராட்சதன் மறுபேருக்காகப் பார்க்கிறானில்லை, கேட்கிறானில்லை, யாதொரு வேலைசெய்கிறானில்லை. எல்லாந் தனக்காகவே பார்ப்பதும் கேட்பதும் வேலைசெய்வதுமாயிருக்கிறான். சரியானபடம் விஸ்தாரிக்கப்படுமேயாகில் பிரமாண்டமான ஒற்றைக்கண்ணும் ஒற்றைக்காதும் ஒற்றைக்கையுமுள்ளவனாகவும் மற்றக் கண்ணுங் கையுங் காதும் சாய்ந்து கும்பினதுமாயிருக்கும். இந்த இராட்சதன் சனங்களைப் பிடித்துச் சிறையாக்கித் தனது கோட்டைக்குள் அடைக்கிறான். அவர்கள் கொஞ்சநாளைக்கு அவனுடன்கூடச் சகவாசம் பண்ணினால் அவனாய்விடுவார்கள். மற்றப் பக்கம்பாராமல் ஒருபக்கமேபார்ப்பார்கள். இம்மாறுதல் சரீரத்திலல்ல இருதயத்திலுண்டாகிறது. தங்களுக்காகமாத்திரமே கவலைகொள்வார்கள். எப்பொழுதும் இந்த இராட்சதன் தன் விலங்குகளைச் சனங்களிற் பூட்டுகிறான். இளம்பிராயத்திலிருப்பவர்களையே பெரும்பாலும் தன்வலைக்குட் சிக்குகிறான்.

அவனைச் சடர்துடன் காணுதிருந்தும் இப்படிச்செய்கிறானென்பதை ஒருவரும் மறக்கமாட்டோம். மற்றவர்களை நோக்குவதிலும் உங்களைத்தானே அதிகமாக நோக்குகையில் அவன் சங்கிலி உங்கள்மேல் விழுகின்றது. ஒருபிள்ளை வயதுசென்றவர்கள் நிற்க, தனக்குத்தானே ஒரு நல்லாசனம் தேடியிருந்தால் உங்களிற் சங்கிலிமாட்டுகிறானென்றறியுங்கள். ஒருபிள்ளை மறுபேர் வைத்திருக்கப்பட்ட பொருள்களில் பெரும்பொருளை உசிதபொருளை மிகவும் வடிவுள்ளபொருளை எடுத்தால் சங்கிலிமாட்டப்படுகிறது.

நல்லது இந்த இராட்சதனை நாமெல்லாரும் எதிர்க்கவேண்டும். எவ்விதமாக எதிர்க்கவேண்டும்? தூரத்தில் நின்று கல்லெறிவதினாலல்ல நெருங்கி அவனோடே மல்யுத்தஞ்செய்யவேண்டும். நாம் விழுந்தாலும் திரும்பத் திரும்ப எழும்பி அவனுடன் போராடவேண்டும். போராடுவதற்கு வேண்டிய ஆயுதம் மறுபேரிடத்திலில்லை நம்மிடத்திலிருக்கிறது; அதாவது தன்னை வெறுத்தலே அந்த ஆயுதம். அந்த ஆயுதத்தைக் கைபடாதவன் இராட்சதனுக்கு அடிமை.

## சிரச்சேதம்.



எரோது இராசாவானவன் தன் சகோதரனான பிலிப்பினுடைய மனைவி எரோதியாளை சேர்த்துக்கொண்டதினிமித்தம் தேவஊழியக்காரனும் சிறந்தவர்களுமுற்றாதனுமாகிய யோவான்ஸ்நானகன் இராசாவுக்குப் பயமில்லாமல் அவர் செய்தவரும் பாவந்தானகண்டித்தார். அதினால் எரோது குரோதங்கொண்டு அவரைப் பிடித்துக் கட்டி காவலில் வைத்தான். அவரைக் கொலைசெய்ய விரும்பியும் சனங்கள் யோவானைத் தீர்க்கதரிசியென்று நினைத்ததினால் இராசா அவர்களுக்குப் பயந்தான்.

எரோதின் சென்மதினங்கொண்டாடப்பட்ட ஒருநாளையில் எரோதியாளின் புத்திரி அவனுக்கும் அவன் விருந்தருக்கும் முன் நடனம்பண்ணி அவர்களைச் சந்தோஷிப்பித்தாள். அந்தச் சந்தோஷத்தினால் எரோது அவளை நோக்கி நீ எதைக்கேட்டாலும் தருவேனென்று அவளுக்கு ஆணையிட்டு வாக்குப்பண்ணினான். எரோதியாள் தன் பிள்ளைக்கு முன் உணர்த்தியபடி யோவானுடைய சிரசை ஒரு தாலத்தில் தரவேண்டுமென்று கேட்டாள். இராசா துக்கப்பட்டு தானிட்ட ஆணைக்காகவும் தன்னுடன் கூட இருந்தவர்களினிமித்தமாகவும் யோவானுடைய சிரசைக் கொடுக்கக் கட்டளையிட்டான். வலப்பக்கத்தில் இருக்கிற ஸதிரி எரோதியாளின் புத்திரி. அவளுக்குப் பின் தாய் நிற்கிறது. தாலத்தில் யோவான்ஸ்நானகனுடைய தலையை ஒருவன் கொண்டுவந்து நீட்டுகிறான்.

பிள்ளைகளே யோவான், இராசாவுடைய குற்றத்தைச் சொல்வதினால் தனது பிராணனுக்கு மோசமுண்டானாலும் தேவ கட்டளையைச்சொல்லவேண்டுமென்று துணிந்தான். எவ்வகை மோசம் நேரிட்டாலும் தேவ கட்டளையைக் கூறுவது நமது கடமை யென்றுணருங்கள். மாதாமார் கெட்டவர்களாகவும் துன்னடையுள்ளவர்களாகவுமிருந்தால் துற்புத்தியையே தங்கள் பிள்ளைகளுக்குப் போதிப்பார்கள். தீர்க்கதரிசி சொல்லியபடி தாயைப்போல மகளிருப்பாளென்பது உண்மை. தேசத்தின் பாதியை அவள் கேட்டால் இவ்வுலகத்தில் மோட்டியாயிருக்கலாம். ஒன்றுக்கும் கூடாத தலையை அவள் கேட்டதினால் அவள் தாய் யோவானிற்கொண்டிருந்த வன்மம் எவ்வளவென்று பாருங்கள். எரோது கிரியாப்பிரகாரம் வாக்குப்பண்ணிய விரத்தையும் பாருங்கள். தேவ கட்டளையை அசட்டைபண்ணி தனது ஆணையை நிறைவேற்றுவது பிரதானமென்றெண்ணி பாவத்தின்மேல் பாவத்தைச் செய்தான். இச்சரித்திரத்தாலுண்டாகும் படிப்பினைகளைத் தலைவரும் பெற்றாரும் பிள்ளைகளும் கவனிக்கவேண்டும். மனுஷருக்கல்லத் தேவனுக்குப் பயப்படுங்கள்.

## தேவன் மரிக்கவில்லை.

ஸ்கொத்திலாந்து தேசத்தின் கிழக்குப்பகுதியில் ஒருதேபவர்தியுள்ள குருவானவர் இருந்தார். அவருடைய சபையார் கொஞ்சப்பெயர் ஆனாலும் அவர்களெல்லாரும் உத்தமர். அக்குருதொழிலை நடத்திவருங்காலத்தில் திடுகூருக மரித்துவிட்டார். அவர் மனைவி விதவையானாள். அவர் பிள்ளைகள் உதவியற்றவர்களானார்கள். அவர் சபையார்கொடுத்துவந்தசொற்பசம்பளம் அவருடைய சிலவுக்கு மெத்தஅரிதாகக் கண்டது. அவருடைய மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் யாதொன்றும் மிச்சமாக விருந்ததில்லை. தங்களைத் தாபரிப்பதற்கு யாதொரு வழிவகையில்லாதிருந்தார்கள். அவருடைய மனைவி தன் புருஷனில்லாததினால் இனிஎன்னசெய்வோம எப்படிச் சீவிப்போமென்று ஆறு விசாரங்கொண்டு அவர் மரித்த அடுத்த காலமே சிந்தித்துக்கொண்டு மனக்கலக்கினவளாகவிருக்கையில் ஐந்துவயதுள்ள அவளுடைய இளையமகன் தாய் விசனத்துடன் மனம் சோர்ந்திருப்பதைக்கண்டு, மெதுவாக அவள் பக்கத்திற்போய்த் தன் தலையைத் தாயின் மடியில் வைத்து, மாதாவே, மாதாவே, தேவன் மரித்துவிட்டாரா என்றான். உடனே அவ்வார்த்தை தேவதூதனின் சத்தம்போற் காதில் ஒலிக்க, அவள் முகம் சந்தோஷத்துடன் பிரகாசிக்கத் தன் மகனைக்கட்டி மார்போடே அணைத்துச் சொன்னது, இல்லை, இல்லை, என் மகனே, தேவன் மரிக்கவில்லை. அவர் பிதா அற்றவர்களுக்குப் பிதாவாகவும், புருஷனற்றவர்களுக்குப் புருஷனாகவும் இருக்கிறவரென்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அவர் வாக்குகள் உண்மையும் நிலைபேறுமானவை, ஆகையால் அவரில் அன்புவைக்கிறேனென்றாள்.

அவளுடைய புருஷன் பராமரித்துவந்த அந்தச் சிறுசபையார் அவளையும் பிள்ளைகளையுந் தாபரிக்கப் போதிய சம்பளங் கொடுத்துவந்தார்கள். பின் அவளுடைய பிள்ளைகள் வளர்ந்து கெட்டிக்காரராகிச் சனங்களினால் மதிக்கப்பட்டு நல்ல உத்தியோகங்களைப் பராமரித்துவந்தார்கள்.

பிள்ளைகளே, தேவன் நம்மை கைவிடாரென்று ஒருபொழுதும் மறவாதே. தேவன் ஒருபொழுதும் கைவியார். நீதிமானையும் அவன் சந்ததியையும் அப்பமிரக்கவிடார். முந்தித் தேவனுடைய இராச்சியத்தைத் தேடுங்கள். அப்பொழுது தேவையானவைகளை அவர் கொடுப்பாரென்று நம்புங்கள்.

## நல்நிர்ணயம்.

ஆறு வயதுள்ள ஒரு சிறு பெண் மரித்து தேவன் வீற்றிருக்கும் வாசஸ்தலமாகிய மோட்சத்துக்குப் போனாளென்று நம்புதற்கு இடமுண்டு. அவள் மரிப்பதற்கு ஒரு வருஷத்துக்கு முன் மாதாவானவள் அவளுக்கு ஒரு எழுத்துப் பெட்டி கொடுத்திருந்தாள். பின்னை மரித்ததின்பின் மாதா எழுத்துப் பெட்டியைத் திறந்து பார்த்தஇடத்தில் அவள் முதல்முதல் எழுதிவைத்த ஐந்து நிர்ணயங்களைக் கண்டாள். அவையாவன. ௧. நான் காலமே விழித்து எழும்பினவுடன் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துவேன். ௨. என் பிதாவும் மாதாவுஞ் சொல்வதை எப்பொழுதுங் கவனிப்பேன். ௩. என் பாடத்தைக் கூடியமட்டுஞ்செவ்வையாகப்படிப்பேன். ௪. என்னுவியன்றனவுக்குக் கோபத்தை நீக்கிப் பட்சமுள்ளவளாக இருக்கப் பிரயாசப்படுவேன். ௫. தேவபுத்திரியாக நான் நடக்கவேண்டும். என்பவைகளே.

பிள்ளைகளே, இவ்வைந்து நிர்ணயங்களும் உத்தமமென்று உங்கள் மனச்சாட்சி சொல்லவில்லையா? சந்நாரியங்களைப் பிள்ளைகள் தங்கள் இளவயதிற் பிடித்துக்கொண்டால், முதிருங்காலத்தில் விடமாட்டார்கள். அப்படியே சாலோமோன் சொல்லுகிறார். ஒவ்வொரு பிள்ளையும் இவ்வைந்து காரியங்களை தங்களுக்குப் பிரமாணமாக்கிக்கொள்ளும்படி கேட்கிறோம்.

## நற்செய்கை.

யோகான்றே என்பவர் சுற்றிதில்நகருக்கவிருந்தமந்தி அரசனுக்கு ஒரு மந்திரியாகவுமிருந்தார். அவருக்கு அந்தியகாலம் நேரிட்டபொழுது தனது புத்திரருள் ஒருவனை அழைத்து எனது சவச்சேமத்தைப்பற்றி நீ நடப்பியான விதமாய் நடத்தவேண்டும். அப்படி நீ செய்வாயாகில் சா ரூபாயளவுக்கு ஒரு ஆதாயமுண்டு. அந்தப்பணத்தை நீயும் உன் சகோதரியுமாகச் சேர்ந்து இதற்குப் பாத்திரமுள்ள விதவையாரென்று கண்டு அவளுக்குக் கொடுத்துப்போடவும். இப்பொழுததானே அந்தப் பணத்தை என் கண்முன்வைத்து எண்ணுங்களென்றார்.

அவர் காலஞ்சென்ற சிறிது காட்சியின்பின் இந்தத் துரையுடைய மகன் ஒரு விதவைக்கு சந்தோஷ செய்தியொன்றிருக்கிறது, நீ வந்து என்னைக் காணவேண்டும் என்று ஒரு காகிதம் எழுதினார். ஆனால் அந்த விதவை மனத்தமோதி எனக்கு என்ன சந்தோஷசெய்தி அவரிடத்தில் உண்டு என்று எண்ணி, என்றாலும் போய்ப்பார்ப்போமென்று போனாள். அப்பொழுது பிதாவுடைய வார்த்தைகளைப் பிள்ளைகள்சொல்லி நீயே அந்தவுபகாரத்துக்குப் பாத்திரியெனக் கண்டு சா ரூபாயையும் உனக்குத்தருகிறோம் என்றார்கள். இதற்குப்பதில்சொல்லவகையறிந்தெரியாமல்பெற்றுக்கொண்ட உபகாரத்தையும்வைத்துக்கொண்டுபோனாள்.

இக்கதை நற்படிப்பினையைக் காட்டுகிறது. இவ்விதமாக நமது தேசத்தார் செய்வார்களேயானால் எவ்வளவு நன்மையுண்டாகும். யாதொரு வயத்தை எதிர்பாராமல் துன்பத்தையும் துயரத்தையுஞ் சஞ்சலத்தையும் கண்டாலும் வீண்செலவுகள் நமது ஊரில் மிகுதியாகவிருக்கிறது. அவைகளை ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டப் பெருகும். ஆகையால் அவ்வகைப்பட்ட வீண்செய்கைகளையுந் தள்ளி அவைகளுக்குச் செல்லும் பணத்தை துரைமக்களைப்போற் செய்வீர்களானால் தேசத்தார் தள்ளிவிடார்கள். இடம்பமான நடக்கைகளைத் தள்ளி யாவருக்கும் யோக்கியமானவைகளைச் செய்யுங்கள்.

7s. & 6s.

## வேண்டுதல்.

"Go when the morning shineth" &c.

௧. என்றும் விடியற் காலம்,
கார் இருட் சாமமும்,
பொழுது படுந் தோறும்,
நல் மத்தியானமும்
நீ லோகசிந்தை விட்டு
உன் வேண்டல் வழியாய்
அநாதி தேவனுக்கு
உன் காரியஞ் சொல்வாய்.

௨. உற்றார், பெற்றார், பகைஞர்,
எல்லார்க்குமாகவே,
நல் ஆசீர்வாதம் ஈவர்
நீ கெஞ்சி, வேண்டவே
உன் மீட்பரை முற்கொண்டு,
விண்ணப்பஞ் செய்வதால்
விரோதம் யாவும் வென்று,
மகிழ்வாய், அவரால்.

௩. பிதாவிடத்தில் செல்லும்
ஏழையின் வேண்டல் தான்
பூலோகச் சோலி வெல்லும்
விடாத நேசமாம்;
நெஞ்சில் இருக்கும் எண்ணம்
அறிந்த தேவனே
அதில் உண்டாம் வணக்கம்
அங்கீகரிப்பாரே.

௪. பிதாத் தம்மோடே பேச
கொடுக்கும் அருளே
யாவற்றிலும் உதித்த
விசேஷ இன்பமே.
எங்கே மா துக்கத்தோடு
கிலேசப் படுகில்,
உன் பாரச் சுமையோடு
சிலுவை அடியில்.

## சத்தியவேதக் கேள்வி.

௬ம் பாடம்.

இராசசங்கர்த்தானின் புத்திரனைச் சொஸ்தமாக்குதல்.

யோவான். ௪: ௪௬—௫௩.

௧. யேசு கானாவூரிலிருக்கையில் கப்பர்நாகூமிலிருந்து வந்தவனார்?

௨. ஏன் வந்தான்?

௩. யேசு அதற்கு என்ன சொன்னார்?

௪. அடையாளம் என்றதின் கருத்தென்ன?

௫. இராச சங்கர்த்தான் திரும்பவும் தனது விண்ணப்பத்தை எப்படி வெளிப்படுத்தினான்?

௬. கானாவுக்கும் கப்பர்நாகூமுக்கும் எவ்வளவு தூரம்? ௨௰ மைல்.

௭. இவ்விண்ணப்பத்துக்கு யேசு எவ்வகையாக மறுமொழி சொன்னார்?

௮. அவன் அதை விசுவாசித்தானா?

௯. வழியில் அவனைச் சந்தித்ததார்? அவர்கள் சொன்னது என்ன?

௰. எந்நேரத்திற் சுகமடைந்தான்?

௰௧. யேசு சொன்ன நேரமிதுதானா?

௰௨. இதுகாரியத்தால் இராசசங்கர்த்தான் என்ன செய்தான்?

௰௩. வீட்டார் என்பது ஆரை? சமுசாரம் பிள்ளைகுட்டிகள்.

௰௪. யேசு ஏன் கப்பர்நாகூமுக்குப் போகவில்லை? அங்கேபோய்ச் சுகமாக்கக் கூடியதுபோல இங்கேயிருந்துஞ் சுகமாக்கவல்லவர்.

## பூரணமல்ல.

நூறுவருஷத்திற்குமுன் சில அரசுக்குரிய குழப்பமுண்டானதினால் போஸ்தன் நகரத்தார் சில ஒழுங்குச்சட்டத்தை உண்டாக்கினார்கள். பொழுது அஸ்தமனமானதின்பின் கண்ணாடிவிளக்குக் கூடில்லாமற் தெருவிற் காணப்படும் எவ்வகைப்பட்ட காப்பிரிகளையும் மறியற்படுத்த வேண்டுமென்று ஒரு சட்டமுண்டாக்கினார்கள். இச்சட்டமுண்டுபட்டுச் சிறிதுகாலையில் ஒரு விருத்தனான காப்பிரி முழு இருட்டிற் காணப்பட்டு விளக்கத்திற்குக் கொண்டுபோகப்பட்டபொழுது நீதவான் நீ குற்றவாளியாவென்றதற்கு, இல்லையையா, என்னிடத்தில் கண்ணாடிவிளக்குக்கூடு இருக்கிறதென்று சொல்லி திரியும் எண்ணெய்யுமில்லாத ஒன்றைக் காட்டினான். அப்பொழுது அவனை விடுதலைபண்ணித் தாங்கள் உண்டுபண்ணிய சட்டத்தைத் திரியுள்ள கண்ணாடி விளக்குக்கூடு என்று திருத்தினார்கள்.

இதுநடந்து சிறிதுகாலையின்பின் மறுபடியும் இந்தக் காப்பிரி இருட்டிற் பிடிக்கப்பட்டு நீதவானின் முன் கொண்டுவரப்பட்ட வேளையில் திரியுள்ள ஒரு கண்ணாடிக்கூட்டைக் காண்பித்துத் தான் குற்றவாளி யல்லவென்றான். அந்தத் திரியில் நெருப்பில் மணந்தாலும் ஒருபொழுதும் பிடித்ததில்லை. நீதவான் அவனைக் கண்டித்து விடுதலைபண்ணினார். திரும்பவும் அந்தச் சட்டத்தை வெளிச்சமுள்ள திரியையுடைய கண்ணாடிக்கூடு என்று திருத்தினார்கள். பின்பு காப்பிரி தான் இருளுக்குளிருந்து அரசாட்சிக்கு அதிக வெளிச்சத்தை உண்டாக்கினேனென்றான்.

எவருந் தங்களைக் கெட்டிக்காரரென்று சொல்ல இடமில்லை. அறிவாளிகள் அறிவற்றவர்களிடத்தில் பல உதவிகளை அடைவார்கள். சீர்திருந்தினவர்கள் வேடரிடத்திற் சில அறிவை அடைவார்கள். மனுஷருண்டாக்கிய பிரமாணங்கள் காலத்துக்குக்காலம் மாறும். ஆனால் தேவனுண்டாக்கிய பிரமாணம் அவர் மாறாதவராக இருப்பதுபோல அதுவும் மாறாமலிருக்கும். பூரண அறிவுள்ளவர்கள் மனுஷருக்குளில்லை. தேவனே பூரண அறிவுடையவர். "உங்களிலொருவன் ஞானத்திற் குறைவுடையவனாயிருந்தால், கடிந்துகொள்ளாமல் அதைச்சம்பூரணமாக யாவருக்கும் ஈந்தருளுந் தேவனிடத்தில் வேண்டிக்கொள்ளக்கடவன்; அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" என்று தேவன் சொல்வதினால் ஞானத்தைத் தேவனிடத்தில் தேடுங்கள்.

## விக்கிரகபரீட்சை.

பாசுபிக்குச் சமுத்திரதீவுகளில் ஒன்றுக்கு வாகோன் என்று பேர். அத்தீவின் பிரபு இற்றைக்குச் சிலவருஷங்களுக்குமுன்னே தன் பரிவாரத்தையும் மற்றும் பிரபுகளையும் ஒருநாள் அழைப்பித்தான். அவர்கள் சமுகத்தில் தான் வெகுநாளாகப் பூசித்துவந்த விக்கிரகங்களில் ஏழைக் கொண்டுவந்து நிறுத்தும்படியாகக் கட்டளையிட அவன் பணிவிடைக்காரர் அவ்விதமே செய்தார்கள். அதற்குப் பின்பு அவன் அந்த விக்கிரகங்களை நோக்கி உங்களுக்குப் போக்குச்சொல்ல இடமில்லாதபடிக்கு நான் சொல்வதை உற்றுக்கேளுங்கள். உங்களைப் பரிசோதிக்கும்படியே கொண்டுவரப்பண்ணினேனென்று சொன்னபின் தான் அதிகமாகப் பூசித்துவந்தமுதல் விக்கிரகத்தைப்பார்த்து இப்பொழுதே நீ சட்டென எழுந்து ஓடு இல்லாதிருந்தால் மூட்டிய அக்கினிச்சுவாலையில் தகிக்கப்படுவாயென்றான். அந்த விக்கிரகமோ காலிருந்தும் எழும்பியோட வகைபார்க்கவில்லை. அதற்குப்பின்பு அப்பிரபுவானவன் இரண்டாம்விக்கிரகத்தை நோக்கி நீ சுவாமியானால் சட்டென எழும்பியோடென்றான். அதுவும் அசையாமலிருந்தது. இவ்விதமே அவன் ஒன்றின்பின்னொன்றாய் ஒவ்வொருவிக்கிரகங்களுக்கும் சொன்னான். அவைகளோ ஊமைகள்போல யாதொன்றும் பேசாது மவுனமாயிருந்தன. உடனே அவன் அந்த விக்கிரகங்களை மூட்டிய அக்கினியில் இடுவித்து எரிப்பித்ததுமன்றி அவைகள் இருக்கும்படி கட்டுவித்த கோவில்களையும் அக்கினிபகவானுக்கு இரையாக்குவித்தான். அன்றுமுதலாக அந்தப் பிரபுவும் பிறரும் விக்கிரகங்களைத் தள்ளி அநாதிநித்திய சுயம்புவாய் அகண்டபரிபூரணமிருக்குந் தேவனை அறியவும் வழிபடவுந் தொடங்கினார்கள்.

## பாம்பு கொல்லல்.

பிராஞ்சுதேசத்தின் தென்பகுதியில் சிறிதுவருஷத்துக்குமுன் பாம்புமிகுதியானதினால் அத்தேசத்தாருக்கு அது ஒரு கொள்ளைநோய்போலவிருந்தது. அரசாட்சியார் கொல்லப்படும் ஒவ்வொரு பாம்புக்கும் இரண்டரைப்பென்னி உபகாரமாகக் கொடுக்கப்படுமென்று விளம்பரம் பண்ணினார்கள். ஒரு ஸ்திரீ இவைகளைக் கொல்வதில் மகா சூழ்ச்சமுள்ளவள். ஏதோ ஒருவகையாக அவைகள் இருக்குமிடத்தை மணத்தினால் கண்டுபிடிப்பாள். கண்டுபிடித்தவுடன் பின்னொருவருக்குந் தெரியாதபடி தான் உண்டாக்கிய சீழ்க்கை வழியால் அவைகளை வெளியே வரும்படி செய்வாள். வெளியேவந்தவுடன் சீழ்க்கையொத்த சுவரணைகேடும். உடனே கொல்லுவாள். சென்றவருஷத்தின் வைகாசிமாதம் முதலாந்திகதி தொடங்கி புரட்டாசி பத்தாந்திகதிக்குள்ளாக [illegible] பாம்புகளைக்கொன்று தன் உபகாரத்தைப் பெற்றுக்கொண்டாள்.

## ஒரு யோக்கிய பணிவிடைகாரன்.

சில வருடங்களின்முன் ஒரு ருஷியபிரபு பிரயாணம் பண்ணும் நோக்கத்துடன் தன்மனைவி உடனும் தன் உயிர்போலத் தன்னெசமானை நேசித்த ஓர்பணிவிடைக்காரனுடனும், நான்குகுதிரை பூண்ட ஓர் இரதத்தில் ஏறிச்சென்றார், அப்படி அவர்கள் செல்லப் பொழுதுபட்டது; உடனே கோனாய்களின் சத்தம் அவர்கள்காதில் எட்டியது. சாரதியும் எசமானின் உத்தரவின்படி இரதத்தைக் கெதியாய்ச் செலுத்தினான். அவ்வேளையில் கோனாய்களும் இரதத்தைச் சமீபித்தன. எசமானும். பணிவிடைக்காரனும் குண்டினால் இரண்டு கோனாய்களைச் சுட்டுக்கொன்றார்கள். மீதிகோனாய்கள் இறந்த இவ்விரண்டையும் பட்சித்து, இரத்தக்குடியினால் வெறிகொண்டு வண்டிலைப்பின்தொடர்ந்தன. மறுபடியும் குண்டினால் காயம்பட்டு இறந்த இரண்டு கோனாய்களை மற்றவைகள் உண்டு இன்னும் அவர்களைத்துரத்தின. அந்தப்பிரபு இத்துட்டமிருகங்களைத் தரிக்கச் செய்யும்படி நினைத்து வண்டிலில்கட்டி இருந்த குதிரைகளிலொன்றை அவிழ்த்துவிட்டார். காட்டுக்கூடாக ஓடின இந்த குதிரையைக் கோனாய்கள்தொடர்ந்து கொன்று உண்டன. வேறுமொரு குதிரையை அவிழ்த்துவிட அதுவும் அம் முடிவையே அடைந்தது. தன் எசமானோடிருந்த அப் பணிவிடைகாரன் தங்கள் எல்லோருக்கும் மோசம் விளையுமென்றெண்ணி "எசமானே, நான் என் இளம்பிராயந்தொடுத்து உமக்கு பணிவிடைசெய்துவருகிறேன். என் சீவனைப்போல் உம்மை நேசிக்கிறேன். இவ்வேளையில் உங்களைக் காக்கிறதற்கு ஓர்வழியுண்டு. என் மனைவியையும் பிள்ளைகளையுங்காத்துக்கொள்ளும்" என்றான். இப்படிச் சொல்லுகிறவேளையில், கோனாய்கள் இவர்களைப் பட்சிக்கும்படியாக வந்துவிட்டன. இவர்களுக்குள் இந்த யோக்கியமான பணிவிடைகாரன் தன்னைத்தானே கோனாய்க்கிரையாகக் கொடுத்து தன் எசமானையும் அவர் சமுசாரத்தையும் தப்புவித்தான். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் பிராணனைக் கொடுக்கும்படியான அன்புக்கு அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" ஆகில் "கிறிஸ்துவோ நாம் பாவிகளாயிருக்கையிலே நமக்காக மரித்ததினாலே பராபரன் நமதுமேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார்".

S. C.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.